Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No<br>TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment<br>WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |

வேணு : 15 மார்ச் 2010 கானம் 8




விட்டளபுரம் ஸ்ரீப்ரேமிக விட்டல மந்திர் - சிவராத்திரி 12.2.2010 அன்று


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
E-mail : contact@namadwaar.org


ஸ்ரீ ஹரி

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



மதுரபுரி ஆஸ்ரமம் - ஸ்ரீ ஜெய ஹனுமான் சிவராத்திரி 12.2.2010

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


வேணு : 15 மார்ச் 2010 கானம் 8




அமெரிக்கா ஹூஸ்டனில் புதிய
நாமத்வார் திறப்பு, பிப்ரவரி – 14, 2010








பிப்ரவரி 4, 2010 - சிங்கப்பெருமாள் கோவிலை அடுத்துள்ள
தென்மேல்பாக்கம் கிராம கோவில் கும்பாபிஷேகம்




# ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திரா கிரஹப்ரவேசம், 16-18 பிப்ரவரி 2010 - இந்திரப்ரஸ்தம்





ஸ்ரீப்ருந்தாவன மஹாத்மியம் (ஹிந்தி) வெளியீடு





ஸ்ரீக்ரந்த பகவான்

(விவரங்களுக்கு பார்க்க பக்கம் 09)





அயோத்யா மண்டபம் – மேற்கு மாம்பலம் – ஜனவரி 25–31 –
–ஸ்ரீஸ்வாமிஜியின் பக்த விஜயம் உபன்யாசம்;





அயோத்யா மண்டபம் – மேற்கு மாம்பலம் – ஜனவரி 31 – ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகளின் திருவுருவ புறப்பாடு (விவரம் மதுரமான மஹனீயர் – பக்கம்3)





அயோத்யா மண்டபம் – மேற்கு மாம்பலம் – ஜனவரி 25–31 –
வேதபாராயணத்தில் ஸ்ரீசாந்தீபனி குருகுல வித்யார்த்திகள்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 15 மார்ச் 2010 கானம் : 8

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -20 | 12 |
| மதுரமான மஹனீயர் - 168 | 03 | பாலகர்களுக்கு ஒரு கதை | 23 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திரா கிரஹப்ரவேசம் | 09 | மாலே மணிவண்ணா - 82 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**யதி ராஸீ௩ மே காமான் வராம்ஸ்த்வம் வரதர்ஷப |**
**காமாநாம் ஹ்ருத்யஸம்ரோஹம் பவதஸ்து வ்ருணே வரம் ||**

**பகவானே, தாங்கள் வரம் கொடுப்பதில் மிகவும் சிறந்தவர். தாங்கள் நான் விரும்பிய வரங்களை தருவதற்கு சித்தமாய் உள்ளீர். அப்படி ஏதாவது வரம் தந்துதான் ஆக வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், ஒரு வரம் தாருங்கள். என் மனதில் சிறிதளவு ஆசை கூட எவ்விதத்திலும், எந்த விஷயத்திலும் தலை தூக்கக்கூடாது என்ற வரத்தையே தங்களிடமிருந்து ப்ரார்த்திக்கிறேன்.**

**– ஸ்ரீப்ரஹ்லாதன்**

- ஸ்ரீமத் பாகவதம் (7-10-7)



## ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: அடாணா தாளம்: ஆதி



ஹரியும் குருவும் வேறுன்றுரைப்பது
அறியாதவர் பேச்சு
ஹரியே குருவென்றும் குருவே ஹரியென்றும்
என் அனுபவத்தில் ஆச்சு

(ஹரியும்)

ஹரியும் குருவும் இரண்டெழுத்தில் ஒன்றாச்சு
இரண்டற்ற ப்ரம்மானுபவத்தால் ஒன்றாச்சு
குரு க்ருபையே ஹரிக்ருபை ஆகும்
ஹரி க்ருபையே குருக்ருபை ஆகும்

(ஹரியும்)

குரு ஸேவையே ஹரிஸேவை ஆகும்
குரு த்யானமே ஹரித்யானமாகும்
குருஜபமே ஹரிஜபமாகும்
குருசிந்தனையே ஹரி சிந்தனையாகும்

(ஹரியும்)

முரளீ தரன் சொல்லும் இந்த சொல் எல்லாம்
(அந்த) முரளீ தரனுக்கு ஸம்மதமாச்சு

(ஹரியும்)

# மதுரமான மஹநீயர் – 168

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)



மேலமாம்பலம் அயோத்யா அஸ்வமேத மஹாமண்டபத்தின் அடிக்கல், ஸ்ரீமஹாபெரியவர்களால் நாட்டப்பட்டது ஆகும். மாம்பலத்தில் உள்ள Health Centreஐயும், இதையும் நிறுவியவர் ஒரு சுதந்திர போராட்ட தியாகி. காந்திய வழியை பின்பற்றியவர். தன்னலம் கருதாது, பிறருக்காகவே வாழ்ந்தவர்.

இந்த அயோத்யா மண்டபத்தில், இதுவரை மூன்று சித்தாந்தத்தை சேர்ந்த மடாதிபதிகளும், பலமுறை தங்கள் தங்கள் பூஜையோடு முகாமிட்டுள்ளனர். ராமாயணம், பாரதம், பாகவதம், நாராயணீயம் போன்ற புராணங்கள், பல மகான்களால் எண்ணற்ற முறைகள் இங்கு சொல்லப்பட்டுள்ளது. இங்கு நடந்துள்ள ஹோமங்கள் போன்றவற்றிற்கும் கணக்கே கிடையாது.



நமது ஸ்ரீஸ்வாமிஜியும், பல முறை இங்கு பிரவசனம் செய்துள்ளார். ஒரு நாள் ஸ்ரீஸ்வாமிஜி நாம் நடத்திவரும் அனைத்து பாடசாலை வித்யார்த்திகளும் இந்த ராமர் சன்னதியில் பாராயணம் செய்தால், ராமருக்கு மிகவும் ப்ரீதிகரமாக இருக்குமே என்று நினைத்தார். அந்த சமயம் பார்த்து, அயோத்யா



மண்டபத்தின் நிர்வாகி ஸ்ரீராமசுவாமியும், ஸ்ரீராமனும், ஸ்ரீஸ்வாமிஜியை உபன்யாசத்திற்காக அழைத்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி



இந்த அயோத்யா மண்டபத்தில், ராமாயணம், பாரதம், பாகவதம், நாராயணீயம் போன்ற புராணங்கள், பல மகான்களால் எண்ணற்ற முறைகள் சொல்லப்பட்டு உள்ளது. இங்கு நடந்துள்ள ஹோமங்கள் போன்றவற்றிற்கும் கணக்கே கிடையாது.

தனது அபிப்ராயத்தை சொல்ல, அதற்கு அவர்களும் சந்தோஷமாக சம்மதம் தெரிவித்தார்கள்.

25.1.2010 முதல் 31.1.2010 வரை, காலை முதல் மாலை வரை, ரிக்,யஜுர்,ஸாம வேதபாராயணம் நடந்தது. இதில் வித்யார்த்திகள் மட்டுமே 130 பேர் கலந்து கொண்டார்கள். மதுரபுரி ஆஸ்ரமம், ஸ்ரீரங்கம், ஓங்கோல்(AP) ஆகிய இடங்களில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, ஸ்ரீசாந்தீபனி குருகுல வேதபாடசாலை வித்யார்த்திகள் கலந்துகொண்டார்கள். இதை



தவிரவும், ஸ்ரீஸ்வாமிஜியின் ப்ரேரணையால், திருப்பணி செய்யப்பட்ட, திருநாங்கூர் திவ்யதேச திருக்கோயில்களின் மத்தியில் அமைந்துள்ள ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வைணவ ஆகம பாடசாலை குழந்தைகள் கலந்து கொண்டு, திவ்ய பிரபந்த பாராயணமும் செய்தார்கள் .

தினமும் மாலை 7மணி முதல் 9மணி வரை ஸ்ரீஸ்வாமிஜியின் பக்த விஜயம் ப்ரவசனமும் நடந்தது. மண்டபம், பக்தர்களால் நிரம்பி வழிந்தது. பூர்த்தி நாள் அன்று ஸ்ரீமஹாபெரியவாளின் திருஉருவப்படம், வேத பாராயணத்துடன் பக்தர்களுடன்






விதிஉலா கண்டருளபட்டது. இதில் பல வேத வித்வான்களும், ஸ்ரீ சாந்தீபனி குருகுல வித்யார்த்திகளும் கலந்து கொண்டார்கள். பார்ப்பதற்கு இது மிகவும் கண்கொள்ளா காட்சியாக இருந்தது. பலவிதத்திலும், இந்த நிகழ்ச்சியின் பொழுது மாம்பலம் முழுவதும், விழாக்கோலம் பூண்டு, இதே பேச்சாக இருந்தது. கலந்து கொண்ட வேத வித்வான்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீகண்ணன் தீக்ஷிதர் மற்றும் இந்த நிகழ்ச்சிக்கும், நமது வேதபாடசாலைகளுக்கும் பலவிதத்திலும் உறுதுணையாக இருந்த வல்லம் சாஸ்த்ரா ஸ்ரீ சேதுராமய்யர், அமெரிக்கா அன்பர் ஸ்ரீயக்ஞசுப்ரமணியம் அவர்களது அரும்பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வரும் மாம்பலம் ஸ்ரீசேதுராமன், அமெரிக்கா ஸ்ரீகுருவாயுரப்பன், ஸ்ரீநரசிம்மன், ஸ்ரீசந்திரமௌலி ஷோபனா தம்பதிகள், ஸ்ரீஸ்ரீனிவாசன் கல்பனா தம்பதிகள் ஆகிய எல்லோரையும் ஸ்ரீஸ்வாமிஜி ஆசிர்வதித்து கௌரவித்தார். ஸ்ரீகண்ணன் தீக்ஷிதர் ஸ்ரீஸ்வாமிஜிக்கும், நிர்வாகிகளுக்கும் நன்றி கூறினார். ப்ரவசனத்தின் பூர்த்தியில் அயோத்யா மண்டபத்தின் நிர்வாகிகள் அனைவரும், ஸ்ரீஸ்வாமிஜிக்கு மரியாதையை செய்தார்கள். வேத பாராயணத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட கலச தீர்த்தத்தால், ஸ்ரீராமனுக்கு திருமஞ்சனம் செய்வித்து, வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் ஸ்ரீஸ்வாமிஜியே தீர்த்தம் கொடுத்தார்கள்.







## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

***கேள்வி: உலக வாழ்வில் துக்கம் தாளாமல் , சிலர் தங்களது வாழ்வை தாங்களே முடித்து கொள்கின்றனர். அத்துடன் அவர்களது கஷ்டம் தீர்ந்து விடுகின்றதா?***

பதில்: மனிதனுக்கு இயற்கையில் மரணம் சித்திக்கின்றது. அதன் பிறகு, அவனது உடலை என்ன செய்தாலும் அது வேதனை அடைவதில்லை. ஆனால் ஒருவருக்கு இயற்கையில் மரணம் ஏற்படுவதற்கு முன், அவருடைய சரீரத்தை ஹிம்ஸை செய்தால், அது வலியால் துடிக்கின்றது. இயற்கையாக மரணம் நிகழும் முன் சரீரத்தை வதைத்து மரணம் ஏற்பட செய்தால், சரீரமும் துடிக்கின்றது. அது கொலையாகும். ஏன்?

பிராரப்தத்தின்படி (செய்த கர்ம வினையின்படி) பூமியில் இந்த சரீரம் இவ்வளவு நாள் வாழ வேண்டும் என்பது விதி. அதற்கு முன்னால் நாமாக மாய்த்து கொள்ளும்பொழுதுதான் இவ்வளவும். அதுபோல் இந்த பிறவியில் அனுபவிக்க வேண்டிய சில விஷயங்கள் மட்டும் மனதில் துடிப்புடன் இருக்கும்.

இயற்கைக்கு விரோதமாக சரீரத்தை பிரித்து விட்டாலும், மனதை அறுத்து எடுப்பதற்கான வழி நமக்கு தெரியாததால், அந்த மனோமயமான சரீரம் அதற்கான பிராரப்தம் (இயற்கையான மரணகாலம்) முடியும்வரை அலைந்து கொண்டிருக்கும். பலவந்தமாக அறுக்கப்பட்டவுடன், வேதனையுடனே இருந்து கொண்டு இருக்கும்.

கொடிய நோயால் பாதிக்கப்பட்டவன், அந்த நோயின் வேதனையை அனுபவித்து கொண்டே, பல காலம் வாழ்ந்துகொண்டிருப்பது போல், இந்த மனோமயமான சரீரமும் வேதனையை அனுபவித்து கொண்டே வாழ்ந்து கொண்டிருக்கும்.

***கேள்வி: மனித சேவையே மாதவ சேவை என்கின்றனர். இதன் பொருள் என்ன?***

பதில்: ஒருவரை பார்க்கையில், எலும்பு மற்றும் சதை கூடிய மனிதராய் பார்க்காது, அவருள்ளிருக்கும் இறைவனை பார்க்கவேண்டும். அனைவரையும் அப்படி பாவித்து, சேவை செய்தால், அது உண்மையில் மனிதசேவையிலிருந்து, "மாதவ" சேவையாகி விடும்.

***கேள்வி: நான் சரியான ஆன்மீக பாதையில்தான் உள்ளேன் என எப்படி அறிவது!***

பதில்: வேதமும், உத்தம மஹான்களும் உபதேசித்த பாதையில் தாங்கள் இருந்தால் அதுதான் சரியான பாதை!

***கேள்வி: மஹாமந்திரம் ஜபித்து வருகிறேன். எனக்கு மிகுந்த நன்மை விளைந்துள்ளது. அதே சமயத்தில் இப்பொழுது என்னால் பிறர் (negative)எதிர்மறையாக நடந்து கொள்வது பிடிக்கவில்லை. இது நான் செய்யும் ஜபத்தினாலா?***

பதில்: ஆன்மீகத்தில் முன்னேறும்பொழுது, மனதானது மிகவும் (sensitive)மிருதுவாகிறது. அதனால், நம்மை சுற்றி உள்ள தீய சக்திகளின் பாதிப்புகளை, நாம் முன்பை விட, அதிகமாக உணர்வோம். இதை லட்சியம் செய்யாது, ஒதுக்கி விட்டு, மேலும் ஜபம் செய்யுங்கள். தொடர்ந்து ஜபம் செய்து வர, எல்லாம் சரியாகி விடும்.

***கேள்வி: உலகில் துன்பப்படுவோருக்கு உதவுவது என்பதையே குறிக்கோளாக கொண்டு வாழ்ந்து வருகிறேன். அப்படி இருக்கையிலே எனக்கும் கஷ்டங்கள் வருகின்றன. கடவுள் எனக்கு ஏன் துன்பங்கள் தர வேண்டும்?***

பதில்: தங்களுக்கு கஷ்டம் வரும்பொழுது, அதன் வலியை நன்கு உணர்வீர்கள். அப்பொழுது, அத்தகைய துன்பப்படுவோரின் துயரம்



மேலும் நன்கு புரியும். அதனால், தாங்கள் மேலும் நன்கு சேவை செய்ய இயலும். தாங்கள் துன்பப்படுவோருக்கு உதவுவதை கண்டு, கடவுள் மகிழ்ந்து, மேலும் நன்கு சேவை ஆற்றவே, கஷ்டங்களை தருகிறார் போலும்.

***கேள்வி: "நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் முன்னரே கடவுளால் தீர்மானிக்கப்பட்டதே!" இது உண்மையானால், நாம் செய்யும் தீமைகளுக்கேற்ப நரகமும், நன்மைகளுக்கேற்ப சொர்க்கமும் ஏன் செல்ல வேண்டும்?***

பதில்: அதுவும் கடவுளால் தீர்மானிக்கப்பட்டதே!

***கேள்வி: நான் மஹாமந்திர கீர்த்தனம் செய்து வருகிறேன். இதை ஜபித்து வந்ததிலிருந்து மிகுந்த நன்மைகளை அனுபவத்தில் காண்கிறேன். மனதில் இனம் புரியாத அமைதி உலவுகிறது. கீர்த்தனம் செய்கையில், அவ்வப்பொழுது இறைவன் என்னுடனே இருப்பதாக தோன்றுகின்றது. இறைவனுக்காக ஏதேனும் தொண்டு செய்ய வேண்டுமென்று மனது ஆசைப்படுகிறது. என்ன தொண்டு என்னால் செய்ய இயலும்?***



பதில்: சந்தேகமின்றி தாங்கள் செய்து வரும் மஹாமந்திர கீர்த்தனமே, ஸ்ரீகிருஷ்ணனுக்கு மிக, மிக பிரியமான தொண்டு. இதை தொடர்ந்து செய்து வாருங்கள். தாங்கள் மிகவும் விருப்பப்படின், தங்களுக்கு கிடைத்த இந்த 'மஹாமந்திரம்' எனும் பொக்கிஷத்தை இன்னும் ஒருவருக்கேனும் கொடுக்கலாமே!

# ஸ்ரீப்ரேமிக வித்யாகேந்திரா கிரஹப்ரவேசம்

வேதத்திற்கு பிறகு, ஆதி காவ்யமாக ஸ்ரீமத் ராமாயணத்தை வால்மீகி அருளினார். வேத வியாசரால் வேதம், இதிகாசம்,புராணங்கள் அருளப்பட்டன. இவையெல்லாம் யுகாந்தரமான விஷயங்களாக இருந்தபொழுதிலும், இன்றுவரையில் எப்படியோ நம் கைகளில் கிடைத்துவருகிறது.

கலியுகத்தில் அவதாரம் செய்த எவ்வளவோ மகான்கள் சித்தாந்த விஷயமாகவும், பக்தி விஷயமாகவும், புராண விஷயமாகவும்,சாஸ்திர விஷயமாகவும், மொழி விஷயமாகவும் கிரந்தங்களும், காவியங்களும் அருளி செய்திருக்கின்றார்கள். அவைகளில் இன்று பல நம் கைகளில் கிடைக்காமல் போய்விட்டதும் உண்மை. உதாரணத்திற்கு பகவன்நாமபோதேந்திர ஸ்வாமிகள், எட்டு க்ரந்தங்கள் செய்தார் என்று தெரிய வருகிறது. ஆனால், அதில் பகவன்நாம ரசோதயம் என்ற கிரந்தம் மட்டும், நம்மிடையே கிடைக்கின்றது.



ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தங்கள், மிகவும் ஆச்சரியமானவை. அவைகள் திவ்யவாணி. அவைகளை வருங்கால சந்ததியர்களுக்காக பாதுகாக்கவும் ,உலகத்தில் உள்ள மொழிகளில் மொழிபெயர்த்து எடுத்துச்செல்லவும், புதுடெல்லி அருகில் ஸ்ரீப்ரேமிக வித்யா கேந்திரா (1816, SECTOR 10A, GURGAON) ஹரியானாவில்



ஸ்ரீசாந்தீபனிகுருகுல டிரஸ்டின் சார்பில் நிறுவப்பட்டது. அதன் திறப்பு விழா ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களால் 16-2-2010 அன்று நடத்தப்பட்டது. திறப்பு விழாவை தொடர்ந்து, வ்ரஜவாஸி ஸ்ரீகிரிராஜ் பண்டிதர் அவர்களால் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்ட, ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களின் கிரந்தமான "ப்ருந்தாவன மஹாத்மியம்" புத்தகம் வெளியிடப்பட்டது.

அதை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இந்தியில் ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களால், ப்ருந்தாவன மாஹாத்மியம் ப்ரவசனம் செய்யப்பட்டது. பூர்த்தி நாளன்று 'மஹாமஹோபாத்யாய' டாக்டர் முல்லைவாசல் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீஸ்ரீஅண்ணாவிற்கு மலர் கிரீடம் வைத்து புஷ்பாஞ்சலி செய்தார்கள். பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்தது.



# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



**Gururam Consulting Private Limited**




## பாகவத பழம் 20

– ஸ்ரீஸ்வாமிஜி

சூரியோதயத்திலிருந்து தொடங்கி, சுமார் பத்தரை மணி நேரம் கதை சொல்லக் கூடியவர், கணீரென்று பாகவதக் கதையை எடுத்துரைக்க வேண்டும். மதியம் சுமார் ஒரு மணி நேரத்திற்கு விராமம் (இடைவேளை) இருக்க வேண்டும். இக்காலங்களில் இறைவனின் நாமங்களை சங்கீர்த்தனம் செய்ய வேண்டும். லகுவான ஆகாரத்தை (எளிதான உணவு) உட்கொள்ள வேண்டும். முடிந்தால் உபவாஸம் இருந்து கதை கேட்கலாம். ஆனால், சிரமமாக இருக்குமானால், உணவு உட்கொண்டு கேட்பதே நல்லது. இல்லையெனில், கதை கேட்பதில் தடங்கல் ஏற்பட்டுவிடும்.

முடிந்தால் உபவாஸம் இருந்து கதை கேட்கலாம். ஆனால், சிரமமாக இருக்குமானால் உணவு உட்கொண்டு கேட்பதே நல்லது. இல்லையெனில், கதை கேட்பதில் தடங்கல் ஏற்பட்டுவிடும்.

ஸப்தாஹம் முடிந்தவுடன், ஸ்ரீமத் பாகவதத்திற்கும், உபன்யாசகருக்கும், பூஜை செய்ய வேண்டும். அனைத்து கதை கேட்பவர்களுக்கும், இறைபிரசாதமாக அன்னம், துளசி மாலைகள் இவைகளை அளிக்க வேண்டும். மிருதங்கத்துடன் கீர்த்தனம் செய்ய வேண்டும். "ஜய" சப்தம், சங்கு ஊதுவது, போன்ற மங்களகரமான சப்தங்களைச் செய்ய வேண்டும். அந்தணர்களுக்கும், எளியவர்களுக்கும் தக்ஷிணையும், அன்னமும் அளிக்க வேண்டும். கதை கேட்பவர் விரக்தராக இருந்தால் பகவத்கீதை படிக்க வேண்டும். இல்லறத்தைச் சேர்ந்தவராக இருந்தால், ஹோமம் செய்ய வேண்டும். ஸப்தாஹத்தில் ஏற்பட்ட குறைகள் நீங்க வேண்டி, ஸ்ரீ விஷ்ணு சஹஸ்நாமத்தைப் படிக்க வேண்டும். முடிந்தால், உபன்யாசகருக்கு ஸ்ரீமத் பாகவதத்தை அழகான அக்ஷரங்களில் எழுதி, தங்க சிம்மாசனத்தில் வைத்து

தானமாக, அளிக்க வேண்டும். இவ்வாறு ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் செய்தால் ஒருவர் தர்ம, அர்த்த, காம மோக்ஷங்களை அடைவதில் எந்த சந்தேகமும் இல்லை.

எல்லோருக்கும் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ சிரவணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், குறிப்பாக, ஏழை, மரணப்படுகையில் இருப்பவன், வியாதியினால் அவதிப்படுபவன், பாக்கியமற்றவன், பாவம் செய்தவன், குழந்தையில்லாதவன், மோக்ஷத்தை விரும்புபவன்- இவர்கள் கேட்க வேண்டும். பெண்மையை அடையாதவர்கள், ஒரே ஒரு குழந்தையை உடையவள், ஒரு குழந்தைகூட இல்லாதவள், குழந்தையை இழந்தவள், கர்ப்பம் நழுவியவள், இவர்கள் நன்மையை அடைய சிரமப்பட்டாவது, இந்த பாகவதக் கதையைக் கேட்க வேண்டும்.

இவ்வாறு சனத்குமாரர்கள், ஸ்ரீமத் பாகவதத்தின் நியமங்களைப்பற்றி எடுத்துரைத்தார்கள். பக்தியின் குழந்தைகளான ஞானமும், வைராக்கியமும், இளமையையும், பொலிவையும் திரும்பப் பெற்றதினால், நாரதர் தனது மனோரதம் பூர்த்தியடைந்தவராய், மயிர்க் கூச்சலிட்டுப் பரமானந்தமடைந்தார். சனத்குமாரர்களைக் கைகூப்பித் தொழுதார்.

அப்பொழுது, அங்கு பதினாறே வயதுடையவரான ஸ்ரீசுகர், ஸ்ரீமத் பாகவத்தை மெதுவாகக் கூறிக் கொண்டே வந்தார். அவர் இனிமையான குரலில் ஸ்ரீமத் பாகவத்தைப் பற்றி "இந்த ஸ்ரீமத் பாகவதாம்ருதமானது ஸ்வர்க்கத்திலோ, ஸத்யலோகத்திலோ, கைலாயத்திலோ, ஏன் வைகுண்டத்திலோ கூடக் கிடைக்காது. ஆகையால், இதை இங்கேயே பருகி, பெரும் ஆனந்தத்தை அடையுங்கள். ஹே பாக்கியவான்களே! இதை நழுவ விடாதீர்கள்!" என்று கூறினார்.

அத்தருணத்தில் சாக்ஷாத் ஸ்ரீஹரி, இந்த சபையின் நடுவில் ஆவிர்பவித்தார். அப்பொழுது, அங்கு நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது.



அந்த அலௌகிகமான கீர்த்தனத்தை பாகவத மாஹாத்மியம் இவ்வாறு வர்ணிக்கின்றது.

*ப்ரஹ்லாதஸ்தாளதாரீ தரளகதிதயா சோத்தவ: காம்ஸ்யதாரீ*
*வீணாதாரீ ஸுரர்ஷி: ஸ்வரகுஸலதயா ராககர்தா Sர்ஜுனோபூத்|*
*இந்த்ரோ வாதீன் ம்ருதங்கம் ஜய ஜய சுகரா: கீர்த்தனே தே குமாரா:*
*யத்ராக்ரே பாவவக்தா ஸரஸரசனயா வ்யாஸபுத்ரோ பபூவ|| (மா: 6-86)*

அதில் ப்ரஹ்லாதன் தாளத்தையும் (சப்ளாகட்டை), உத்தமர் ஜால்ராவையும், நாரதர் வீணையையும், இந்திரன் மிருதங்கத்தையும் இசைத்தனர். அர்ஜுனன் ராகாலாபனை செய்தான். சனத்குமாரர்கள் 'ஜய' சப்தம் செய்தனர். சுகரும், அழகாக பாகவதப் பதங்களை எடுத்துரைத்தார். இவர்களுக்கு நடுவில் மிகவும் அழகாக, பக்தி, ஞானம், வைராக்கியம் – இம்மூவரும் ஆடினர். இதைக்கண்ட பகவான் மிகவும் மகிழ்ந்து, "என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அப்பொழுது அவர்கள், "இனி, எங்கெங்கு பாகவத ஸப்தாஹம் நடைபெறுகின்றதோ, அங்கெல்லாம், தாங்கள் இங்கிருக்கும் அனைவருடன் வந்து, ஏழு நாட்களும் அங்கேயே இருக்க வேண்டும்" என்று ப்ராத்தித்தனர். பகவானும், "அவ்வாறே ஆகட்டும்!" என்று கூறி மறைந்தார்.

பக்தி தேவி, "நான் எங்கு அமர வேண்டும்?" என்று கேட்டபொழுது, சனகாதிகள், "இங்கு கூடியிருக்கும் பாகவதர்களின் மனதில் உனது குழந்தைகளுடன் வசிப்பாயாக!" என்று கூறினார்கள். ஆகையால், பாகவத ஸப்தாஹம் கேட்கும் அனைவரின் இதயங்களிலும் பக்தி தேவியானவள் தனது குழந்தைகளான ஞான–வைராக்கியங்களுடன் வந்து அமர்ந்துவிடுவாள்.

சர்வாங்கத்திலும் பலத்தைப் பெற்று, தனது குழந்தைகளுடன் ஆடிப்பாடிக் கொண்டு வந்த பக்தி தேவி, "நான் எங்கு அமர வேண்டும்?" என்று கேட்டபொழுது, சனகாதிகள், "இங்கு கூடியிருக்கும் பாகவதர்களின் மனதில், உனது குழந்தைகளுடன் வசிப்பாயாக!" என்று கூறினார்கள். ஆகையால், பாகவத ஸப்தாஹம் கேட்கும் அனைவரின் இதயங்களிலும், பக்தி தேவியானவள் தனது குழந்தைகளான ஞான- வைராக்கியங்களுடன் வந்து அமர்ந்துவிடுவாள்.

*க்ருஷ்ணப்ரியம் ஸகலகல்மஷநாஸனம் ச*
*முக்த்யேகஹேதுமிஹ பக்திவிலாஸகாரி|*
*ஸந்த: கதானகமிதம் பிபதாதரேண*
*லோகே ஹி தீர்த்தபரிஸீலனஸேவயா கிம்||* (மா: 6-98)

-இந்த அழகான ஸ்லோகத்தில், பாகவதம், கண்ணனுக்கு மிகவும் ப்ரியமானது என்று கூறுகிறது மாஹாத்மயம்.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணனின் அருட்பார்வை, சிலர் மீது காரணமின்றி விழுந்துவிடுகின்றது. அவர்களுக்கு அவன் விசேஷமாக அருள் செய்ய விரும்புகின்றான். காரணமேயில்லாமல், சிலருக்கு மட்டும் பகவான் இப்படி அருள் செய்தால், உலகம் அவனுக்குப் பாரபக்ஷம் (விருப்பு, வெறுப்பு) உள்ளது என்று கூறுமல்லவா? ஆகையால், அப்படிப்பட்ட சிலரின் கைகளில் முதலில் ஒரு பாகவத க்ரந்தத்தை மெதுவாகத் தள்ளி விடுகின்றான் ஸ்ரீக்ருஷ்ணன். பிறகு, "அவர்கள் பாகவதம் படித்தார்கள், அதனால், நான் அருள் செய்தேன்" என்று சொல்லிவிடுவானாம். ஆகையால், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு மிகவும் பிடித்ததும், எல்லாக் கல்மஷங்களையும் போக்கக்கூடியதும், பக்தியை வளர்ப்பதும், முக்தியையும் அளிக்கவல்லதுமான இந்த ஸ்ரீமத் பாகவதத்தை எல்லோரும் பருகுங்கள்! சிரமப்பட்டு, தீர்த்த யாத்திரை செய்வதால்தான் என்ன பயன்? யமனே தனது தூதர்களின் காதுகளில் "ஸ்ரீமத் பாகவதக் கதையிலேயே மூழ்கியிருப்பவர்களை நீங்கள் தொடலாகாது. ஏனெனில், பாகவதர்கள் அல்லாதவர்களுக்கு மட்டுமே நான் பிரபு" என்கின்றான்.



*பரிஹர பகவத்கதாஸு மத்தான்*
*ப்ரபுரஹம் அன்யந்ருணாம்*
*ந வைஷ்ணவானாம்|* (மா: 6-99)

இந்த ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பதினாலேயே முக்தி கிட்டும் என்பதற்கு, பரீக்ஷித்தே சான்றன்றோ! இந்த பாகவத கதாம்ருதத்தை ஸ்ரீசுகர் பரீக்ஷித்திற்குக் கூறும்பொழுது, அங்கு தேவர்கள் கையில் அம்ருத கலசத்துடன் வந்து, இதைப் பெற்றுக்கொண்டு, எங்களுக்கு கதாம்ருத்தை அளியுங்கள் என்று சுகரை வேண்டினராம். ஆனால் ஸ்ரீசுகரோ, "ஒரு கண்ணாடி துண்டு எங்கே, ஒரு ரத்தினம் எங்கே! அது போல், கதாம்ருதம் எங்கே, தேவலோக அம்ருதம் எங்கே!" என்று அவர்களை நகைத்து அனுப்பி விட்டாராம்.

> *இந்த ஸ்ரீமத் பாகவதாம்ருதமானது ஸ்வர்க்கத்திலோ, ஸத்யலோகத்திலோ, கைலாயத்திலோ, ஏன் வைகுண்டத்திலோ கூடக் கிடைக்காது. ஆகையால், இதை இங்கேயே பருகி, பெரும் ஆனந்தத்தை அடையுங்கள்.*

இந்த ஸ்ரீமத் பாகவதத்தை ஆஸ்ரயித்து, பாராயணம் செய்வதால், கதை சொல்பவரும், கேட்பவரும் இருவருமே ஸ்ரீக்ருஷ்ணஸ்வரூபமாக ஆகி விடுகின்றார்கள். ப்ரம்மஸ்வரூபமாகவே இப்புவியில் "ஸ்ரீமத்பாகவதம்" என்ற பெயருடன் விளங்கும் இதன் மஹிமையை, இதற்கு மேலும் எப்படித்தான் வர்ணிப்பது!

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே |*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ||*

(கனியும்)

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஜனவரி 25 முதல் 31வரை** – சென்னை **மேலமாம்பலம் அஸ்வமேத அயோத்யா மஹாமண்டபத்தில்** வெகு விமரிசையாக **வேத,ப்ரபந்த பாராயணம்** நடைபெற்றது. தினமும் மாலை ஸ்ரீஸ்வாமிஜியின் பக்தவிஜயம் உபன்யாசம் இருந்தது. போதேந்திராள், பக்தமீரா, துளசிதாசர், நாமதேவர், துக்காரம், கோராகும்பர், ஆகிய பல பக்தர்களின் சரித்திரங்களை பற்றி தினமும் இரண்டுமணி நேரம் உபன்யாசம் செய்தார். ஆண்டாள் கல்யாண வைபவத்துடன், பக்த விஜயம் உபன்யாசம் நிறைவு பெற்றது.

**பிப்ரவரி 4 – செங்கல்பட்டு அருகே உள்ள தென்மேல்பாக்கம்** கருமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டார். இந்த வைபவத்தில், ஸ்ரீஸ்வாமிஜிக்கு சிங்கப்பெருமாள் கோவில் அன்பர்கள் ஸ்ரீவெங்கடேசன், தலைவர் ஸ்ரீஏழுமலை மற்றும் சிங்கப்பெருமாள் கோவில் சத்சங்க அன்பர்கள் சார்பில் மிக சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

**பிப்ரவரி 12 – மதுரபுரி ஆஸ்ரமத்தில் *சிவராத்திரி*** அன்று காலை ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் **ஸ்ரீஜெயஹனுமானுக்கு** சிறப்பு திருமஞ்சனம் , பூஜை நடைபெற்றது. திரளாய் அன்பர்கள் கலந்துகொண்டனர். மாலையில் கல்பாக்கம் அருகே உள்ள விட்டலாபுரம் **ஸ்ரீப்ரேமிக விட்டலமந்திரில் பாண்டுரங்கனுக்கு** விசேஷ திருமஞ்சனமும் பூஜையும் ஸ்ரீஸ்வாமிஜியால் செய்யப்பட்டது. அவரே, தமது திருக்கரங்களினால், தீர்த்தப்ரசாதம் அனைவருக்கும் கொடுத்தார். பின்னர் விட்டலாபுரத்தில் வீதிபஜனை மிக சிறப்பாக நடைபெற்றது. இரவு ஸ்ரீமஹாஸ்வாமிகளின் பாதுகைகளுக்கு மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிஜி சிறப்பு பூஜை செய்தார். பல அன்பர்கள் கலந்து கொண்டு குருவருள் பெற்றனர்.

**பிப்ரவரி 14 – அமெரிக்காவில் நாமத்வார்** - குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக உலகெங்கும் நாமத்வார் மையங்கள் திறக்கப்பட்டு அதன் வழியாக மஹாமந்திரத்தின் அளவில்லா



பயன்களை, மக்கள் அனைவரும் பெற்று உய்ய வேண்டும் என்பதே நமது ஸ்ரீஸ்வாமிஜியின் அவா என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. சில மாதங்களுக்கு முன்பு ஆஸ்திரேலியாவில் புதிய நாமத்வாருக்காக, ஒரு இடம் வாங்கப்பட்டது குறித்து மதுரமுரளி வெளியிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். மற்றும் பல நாடுகளில், பல நாமத்வார் அன்பர்கள் இதற்கான பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.


அமெரிக்காவில் கடந்த மூன்று வருடங்களாக சென்னை நாமத்வாரை சேர்ந்த ஸ்ரீராமானுஜம்ஜியும், சௌ.பூர்ணிமாஜியும் சென்று நாமப்பணிகளை மேற்கொண்டு இருந்தனர். இம்முறை அப்படி ஸ்ரீராமானுஜம்ஜி சென்றபொழுது, அமெரிக்காவில் நாமப்பணிகளுக்கு என்று பிரத்யேகமாக ஒரு இடம் நமது GOD-US அமைப்பை சேர்ந்த சத்சங்க அன்பர்களான ஸ்ரீஸ்ரீனிவாசமூர்த்தி ரம்யா தம்பதிகள், ஸ்ரீசங்கர் சுஜாதா தம்பதிகள், டாக்டர் ஸ்ரீராம் நித்யா தம்பதிகள், ஸ்ரீநாராயணன், ஸ்ரீஸ்ரீராம் நிஷா தம்பதிகள், ஸ்ரீராம் ஜெனிதா தம்பதிகள் மற்றும் பல சத்சங்க அன்பர்களின் பெருமுயற்சியானால் திறக்கப்பட்டது. ஸ்ரீஜீவன் லக்ஷ்மி தம்பதிகள் மற்றும் ஸ்ரீஸ்ரீராம் நிஷா தம்பதிகள், இவ்விடத்தை தேர்வு செய்வதில், மிகவும் குறிப்பிடும்படி பங்காற்றினர்.

மிகவும் குதூஹலமாக பிப்ரவரி 14அன்று அமெரிக்கா ஹூஸ்டனில் (3642, Bailey Ave, Manvel, TX) புதிய நாமத்வார் கிரஹப்ரவேசம் நடைபெற்றது. நாமத்வாரை திறந்துவைக்கும் நிகழ்ச்சியாக ஸ்ரீஸ்வாமிஜி "WEBCAST" மூலமாக தமது அருளாசிகளை ஹூஸ்டன் அன்பர்களுக்கு வழங்கினார். ஸ்ரீமாதுரிஸகீஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு பூஜையும், நாமசங்கீர்த்தனமும் செய்யப்பட்டது. இந்த எளிமையான நிகழ்ச்சியில், குருமஹராஜின் அருள் பூரணமாக விளங்கியதை அன்பர்கள் அனைவரும் சொல்லி மகிழ்கின்றனர்.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## ஆறறிவுதானா?



"தேவர்களையும், மற்றும் சாதாரண மனிதர்களுக்கு புலப்படாத காட்சிகளையும் பார்ப்பதாக பலர் சொல்கின்றார்கள். அதை நாம் எப்படி நம்புவது" என்று கண்ணன், தனது நண்பனான முகுந்தனை பார்த்து கேட்டான். இதைக்கேட்ட முகுந்தன், "எனக்கு இதற்கு பதில் சொல்ல தெரியாது; ஆனால், எனக்கு தெரிந்த ஒரு பெரியவர் இருக்கின்றார். அவர் தினமும் பல மணி நேரத்தை த்யானத்திலேயே கழிப்பார். அவரிடம் சென்று கேட்கலாம்" என்று கூறினான். கண்ணனும், முகுந்தனும் அவரை தேடி சென்றனர்.

அவர், தன் வீட்டின் தோட்டத்தில், ஒரு மரத்தடியில் அமர்த்திருந்தார். இருவரும் அவரை சென்று நமஸ்கரித்து நின்றார்கள். அவர், இருவரையும் தன் பக்கத்தில், அமர வைத்துக் கொண்டார். கண்ணன் மெதுவாக, "எனக்கு ஒரு சந்தேகம் ஸ்வாமி, கேட்கலாமா?" என்றான். அதற்கு, அந்த பெரியவர், "எந்த சந்தேகமாக இருந்தாலும், உடனே தகுந்த பெரியவர்களை கேட்டு தெளிவு அடைய வேண்டும். இல்லாவிட்டால் அது மனதில் உறுத்திக்கொண்டே இருக்கும்" என்றார். கண்ணன், தான் முகுந்தனிடம் கேட்ட அதே கேள்வியை கேட்டான். அந்த பெரியவர் சற்று கண்களை மூடி அமர்ந்திருந்தார்.

பிறகு கண்ணனை பார்த்து, அங்கு நெளிந்து கொண்டிருந்த மண்புழுவை காண்பித்தார்; ஒரு மரவட்டையை



காண்பித்தார். சிறகடித்து பறக்கும் வண்ணத்துபூச்சியை காண்பித்தார்; ஆகாயத்தில் பறந்து சென்ற பறவைகளை காண்பித்தார்; கொட்டிலில் கட்டப்பட்டிருக்கும் பசுக்களை காண்பித்தார்; அவர் கூப்பிடவும், வாலை ஆட்டிக்கொண்டு, அவர் பக்கத்தில் வந்து அமர்ந்த நாயை காண்பித்தார்;

பிறகு அவர்களை பார்த்து, "இவற்றில் சிலவற்றிக்கு ஒரு அறிவு, இரு அறிவு, மூன்று அறிவு, நான்கு அறிவு, ஐந்து அறிவு உண்டு. நாம் இங்கு ஒன்றை கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒரு அறிவோடு வஞ்சிக்கபட்டிருக்கிறோம் நாம், என்று ஓரறிவு மட்டுமே உள்ள ஜீவன்களுக்கு தெரியுமா? மற்ற ஐந்து அறிவு உடைய ஜீவன்கள் வரையிலும், அது போல தானே இருக்கும்? அப்படித்தான், நாமும் ஆறு அறிவுதான் முடிவு; அதற்குமேல் ஒன்றும் இல்லை என்று எப்படி முடிவு செய்யமுடியும்? நமக்கு ஏழாவது அறிவு இருக்குமானால், அதனால் இந்த பிரபஞ்சத்தில் உள்ள வேறு ஒன்று நமக்கு புலப்படலாம். எட்டாவது அறிவு இருக்குமானால் மற்றொன்று புலப்படலாம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். சிலருக்கு இயற்கையாக இத்தகைய அறிவு கிடைக்கிறது . சிலர் தியானம், ஜெபத்தின் மூலம், இப்படிப்பட்ட அறிவை அடைகின்றார்கள்.


*நமக்கு ஏழாவது அறிவு இருக்குமானால், அதனால் இந்த பிரபஞ்சத்தில் உள்ள வேறு ஒன்று நமக்கு புலப்படலாம். எட்டாவது அறிவு இருக்குமானால் மற்றொன்று புலப்படலாம். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். சிலருக்கு இயற்கையாக இத்தகைய அறிவு கிடைக்கிறது . சிலர் தியானம், ஜெபத்தின் மூலம், இப்படிப்பட்ட அறிவை அடைகின்றார்கள்.*

அப்படி அடைந்தவர்களுக்கு, நமக்கு புலப்படாத எவ்வளவு விஷயங்கள் புலப்படுகிறது! அப்படிப்பட்ட மேலான அறிவு

படைத்தவர்கள் தேவர்களை பார்க்கலாம் இல்லையா?" என்றார்.

இருவரும் ஆமோதித்தார்கள்.

"சில சமயங்களில் மிருகங்களுக்கும் கூட இப்படி ஒரு விசேஷம் சித்தித்து விடுகின்றது. ஐந்து அறிவு உள்ளது யானை. ஆனால் புராணத்தில் கஜேந்திரனுக்கு ஆறாவது அறிவும் சித்தித்து, பகவானை சரணாகதி செய்தான். அதுபோல், குருவாயூரில் சமீபத்தில் வாழ்ந்த கேசவன் என்றொரு யானை விலக்ஷணமாக இருந்ததை உலகமே அறியும்" என்று அந்த பெரியவர் கூறி முடித்தார். இருவரும், தங்கள் சந்தேகம் நிவர்த்திக்கப்பட்டவர்களாக, அவரை நமஸ்கரித்து சென்றார்கள்.






Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

GURU CHARANAM SRI GURUBYO NAMAHA BHAVA HARANAM

**PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI "MURALIDHARA SWAMIJI"**

JP

JANAKI PHARMACY
32/17, SUBBA STREET,
WEST MAMBALAM
CHENNAI - 33

**SPECIAL DISCOUNT AVAILABLE**

viswanathan.1071@rediffmail.com

PH: 044-45512125 (CELL: 9884724271

**FREE DOOR DELIVERY**

CHANT "OM SRI RAM JAI RAM JAI JAI RAM" ENJOY THE SWEETNESS OF RAM NAM

## சனாதனப் புதிர் : பகுதி – 12 விடைகள்

–ஆத்ரேயன்




1. ஸ்தோத்திர கிரந்தங்கள் -28, காவ்ய கிரந்தங்கள் - 4, நாடக கிரந்தம் -1, வேதாந்த கிரந்தங்கள் - 14, வ்யாக்யாந கிரந்தங்கள் - 8, அனுஷ்டான கிரந்தங்கள் - 2, ரஹஸ்ய கிரந்தங்கள் - 32, தமிழ் பிரபந்தங்கள் - 24, மொத்தம் (113)
2. 862 ஸ்லோகங்கள் - வஸந்த திலகா - 266, ஆர்யா - 116, ஸ்ரக்தரா - 82, அனுஷ்டுப் - 64, மந்தாக்ராந்தா - 61, ப்ருத்வி - 50, மற்ற 16 வ்ருத்தங்கள் - 223
3. மனைவி - திருமங்கையார் - மகன் - வரதன்
4. விஜய நகரத்தை நிர்மாணித்த வித்யாரண்யர் திரு.தேசிகனின் நண்பர்; திரு.தேசிகன் காஞ்சியில் வறுமையில் வாழ்வதை கேள்வியுற்ற வித்யாரண்யர். ஸ்ரீதேசிகனை விஜயநகரம் வருமாறு ஓலை அனுப்பினார்; ஆனால் தேசிகன் வர மறுத்து விட்டார். முதலில் ஒரு ஸ்லோகம், பின்பு 5 ஸ்லோகம் கொண்டவை
5. ரிக் வேதம் - ஐதரேயோபநிஷத் - 'பரஜ்ஞானம் ப்ரஹ்ம' (3-1-3). யஜுர் வேதம் - ப்ரஹதாரண்யகோபநிஷத் - "அஹம் ப்ரஹ்மாஸ்மி" (1-4-10); சாம வேதம் - சாந்தோக்யோபநிஷத் - "தத்வமஸி" (6-8-7); அதர்வண வேதம் - மாண்டூக்யோபநிஷத் - 'அயமாத்மா ப்ரஹ்மா' (2)
6. மாலதி மாதவம், உத்தரராம சரித்ரம், மஹாவீர சரித்ரம்.
7. காதம்பரி, ஹர்ஷ சரித்ரம் சண்டிகா சதகம், பார்வதி பரிணயம் - கனோஜ் கன்யாகுப்ஜ என்ற அரசனான ஹர்ஷவர்தன்.
8. கணவன் - அஜன் - புதல்வன் - தசரதன்.
9. ப்ருஹஸ்பதியின் பிள்ளை - சுக்ராசார்யாரிடம் சென்று சஞ்ஜீவனி என்னும் மந்திரத்தை கற்றார்.
10. 1008 ஸ்லோகங்கள் - 32 பத்ததி



## சனாதனப் புதிர் - பகுதி - 13

–ஆத்ரேயன்

1. "அரிய புலையர் மூவர் பதம் அடைந்தார் என்றே புராணம்" என்று கோபாலகிருஷ்ண பாரதியார் பாடுகிறார். அந்த மூவர் யார்?
2. கைவல்ய நவநீதம் - இதன் ஆசிரியர் யார்? எத்தனை விருத்தங்களை கொண்டது?.
3. செய்யுள் நடையில் இருக்கும் தமிழ் பாகவதம், யாரால் இயற்றப்பட்டது?
4. சரஸ்வதி, நாரதர், தும்புரு இவர்களது வீணையின் பெயர் என்ன?



பெரியாழ்வார்




சேக்கிழார்

5. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
6. பெரியாழ்வாருடைய இயற்பெயர் என்ன?
7. "ராஜ கம்பீர நாடாளும் நாயக" என்று திருப்புகழில் வருகிறது. இந்த நாடு எங்கே இருக்கிறது?
8. பறவைக்கும் அந்தணர்களுக்கும் இரு பிறவி என்கிறார்களே, எப்படி?
9. "வாலிய ஒளிகெழு வனத்தில் வைகியது" என்று கந்தபுராணத்தில் காணப்படும் வனம் எது?
10. "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" - இந்த திருப்பதிகம் யாரால் பாடப்பட்டது?

(பகுதி 13-ன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

பக்தமாலீஜி - 1

ஸ்ரீஜகன்னாததாஸ் ப்ரஸாத் பக்த மாலீஜி என்ற பெயரை கேட்டாலே, ப்ருந்தாவனத்திலுள்ள ப்ரேம பக்தர்களின் ஹ்ருதயம் பக்தி பாவத்தில் நிரம்பி விடும். ஒருமுறை அவரை தரிசனம் செய்தாலும், அவரது ப்ரவசனத்தை கேட்டாலும், அவரது ஸங்கத்தில் ஒரு கணம் இருந்தாலும், அந்த நினைவானது ஒருவருக்கு வாழ்நாள் முழுவதும் போற்றக்கூடியதான பெரும் நிதியாக அமைந்துவிடும். பக்தியின் ஒரு மூர்த்தி ஸ்வரூபமாகவே, பக்தமாலீஜி இருந்தததுதான் இதற்கு காரணம்.

பக்தமாலீஜி மத்யப்ரதேசத்திலுள்ள சசோடா எனும் க்ராமத்தில் ஆஷாராம்ஜீ - பூலாபாயிஜீ தம்பதிகளுக்கு பிறந்தார். படிப்பு முடிந்தவுடன் அவர் ஒரு ஆசிரியராக வேலையேற்றார். குழந்தை பருவத்திலிருந்தே, பக்தி ஸம்ஸ்காரங்கள், இவரிடம் நிறைய காணப்பட்டன. சிறு வயதிலேயே, த்ருவனுக்கு காட்சியளிக்கும் பகவானின் ஒரு படத்தை, மிகவும் ப்ரேமையுடன் பூஜை செய்வார் பக்தமாலீஜி.



அவரது பக்தி பாவங்கள் நாளுக்கு நாள் பெருகியது. அவரது பெற்றோர்கள், அவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இதனால், இவரது பக்திக்கு எந்த பங்கமும் ஏற்படவில்லை. ஆசிரியராக பொறுப்பேற்ற பின்பு, அவரது மனம் குருவை நாடி ப்ருந்தாவனம் செல்ல வேண்டும் என்று துடித்தது. பக்தமாலீஜியே,



தான் குருவை அடைந்தது பற்றி, பின் வருமாறு விவரிக்கிறார் :

"பண்டித் ராமக்ருஷ்ணதாஸ் மூலமாக, குருதேவர், என் மேல் நான் கேட்காமலேயே, மிகவும் கிருபை செய்தார். ஒருமுறை என்னுடைய ஒன்று விட்ட அண்ணன் ஸ்ரீலக்ஷ்மிதாஸ்ஜியுடன், நான் ப்ருந்தாவனம் சென்றேன். அவர் என்னை பண்டித பாபாவிடம் அழைத்து சென்றார். நான் அப்பொழுது சிவபூஜை செய்து வந்தேன். என்னை பார்த்தவுடன் பாபா "ஆஹா! இவர் மேல் சிவபெருமான் கிருபை செய்துள்ளார். லக்ஷ்மிஜி! இவரை டடியாவிலுள்ள மஹந்த்ஜீயிடமிருந்து (பகவான்தாஸ்ஜீ என்பவர்) மந்திர தீக்ஷை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்" என்றார். பகவான்தாஸ் பாபாஜீயும் இதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால், அவர் அதற்கு முன்பு, என்னை மீசையை எடுத்து விட சொன்னார். நான் பெரிய தர்ம சங்கடத்தில் மாட்டி கொண்டேன். பெற்றோர்கள் உயிருடனிருக்கும்பொழுது, எப்படி இவ்வாறு செய்வது என்று யோசித்தேன்.

> நான் அப்பொழுது சிவபூஜை செய்து வந்தேன். என்னை பார்த்தவுடன் பாபா "ஆஹா! இவர் மேல் சிவபெருமான் கிருபை செய்துள்ளார். லக்ஷ்மிஜி! இவரை மஹந்த்ஜீயிடமிருந்து மந்திர தீக்ஷை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்" என்றார்.

அதனால், யாரிடமும் ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல், வீடு திரும்பி விட்டேன். ஆனால், பண்டித பாவின் ஆசீர்வாதம் பொய்க்காதல்லவா? நான்கே மாதங்களில் என் பெற்றோர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். அதனால் எனது மீசையை நான்

எடுக்கும்படியாயிற்று. அஸ்தியை கங்கையில் விஸர்ஜனம் செய்துவிட்டு, திரும்பும்பொழுது ப்ருந்தாவனம் சென்றேன். அப்பொழுது அங்குள்ளவர்கள் "ஏன் சொல்லிக்கொள்ளாமல் ஓடி விட்டாய்?" என்று கேட்டார்கள். நான், அவர்களிடம் எனது நிலையை கூறி, மன்னிப்பு கோரினேன். என்னை மன்னித்து ஸ்வாமி பகவன்தாஸ்ஜி எனக்கு தீக்ஷை அளித்தார். நான் தன்யனானேன்" என்கிறார்.

தீக்ஷை பெற்ற பின், சமயம் கிடைக்கும்பொழுதெல்லாம், பக்தமாலீஜி, ப்ருந்தாவனம் சென்று விடுவார். அவருக்கு அப்பொழுது மாதசம்பளம் பத்து ரூபாய்தான். எப்பொழுதும் பணம் பற்றாக்குறை இருந்தபடியால், அவரால் அடிக்கடி ப்ருந்தாவனம் செல்ல முடியாது. ஒருமுறை ராதாஷ்டமி உத்ஸவம் நெருங்கியது. ரயில் டிக்கெட் வாங்குவதற்கு கூட அவரிடம் பணமில்லை. இருந்தாலும் அவர் கிளம்பி விட்டார். மூன்று அணாவிற்கு, அடுத்த ஸ்டேஷனிற்கு டிக்கெட் வாங்கி வண்டியில் ஏறி விட்டார். வழியில் டிக்கெட் பரிசோதகர் வந்து விட்டார். இவர் அமர்ந்திருந்த பலகையில், மேலும் மூன்று பேர் அமர்ந்திருந்தனர். அந்த பரிசோதகர் அந்த மூவரிடமும் பயண சீட்டை கேட்டார். ஆனால் குருவையே தியானம் செய்து கொண்டிருந்த, பக்தமாலிஜியிடம் இருந்து, அவர் பயண சீட்டை ஏனோ கேட்கவில்லை. அடுத்த ஸ்டேஷனில் அந்த பரிசோதகர் பெட்டியிலிருந்து இறங்கியும் விட்டார். மதுரா ஸ்டேஷனிலிருந்து, வெளியே வரும்பொழுதும் ஒருவரும் அவரிடம் பயணசீட்டை கேட்கவில்லை. குருநாதரும் ராதையும் இவ்வாறு க்ருபை செய்து ராதாஷ்டமிக்கு தனது பக்தனை அழைத்து கொண்டனர்.

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 82

—மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்*
*கால் வழக்கு அறு நிலைக்குன்றமும் பிறவும்*
*அவ்வவை மேய வேறு வேறு பெயரோய்"*

அகநானூற்றில், எழுபதாவது பாடலில், இராமாயண நிகழ்ச்சி ஒன்று சொல்லப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி, வான்மீகியிலோ கம்பனிலோ இல்லை.

"இராமபிரான் ஆலமர நிழலில் அமர்ந்து தன் நண்பர்களோடு ஆலோசனை செய்கிறான். அப்போது ஆலமரத்தில் உள்ள பறவைகள் ஒலிக்கின்றன. அது, மந்திர ஆலோசனைக்கு இடையூறாக இருப்பது கண்ட இராமபிரான், தன் கைகளை மேலே காட்டி குவித்து, பறவைகள் ஒலியடங்க பணிக்கிறான். அதனால் ஒலியடங்கிப் போன பல விழுதுகளை உடைய ஆலமரம்" என்று இந்நிகழ்ச்சியை அகநானூறு கூறுகிறது.

*"வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த*
*பல்வீழ் ஆலம் போல ஒலி அவிந்தன்று"* (அகநானூறு 70:15-16)



> இராமபிரான் ஆலமர நிழலில் அமர்ந்து தன் நண்பர்களோடு ஆலோசனை செய்கிறான். இக்கருத்தால் திருமாலுக்கும் ஆலமரத்துக்கும் தொடர்புண்டு என்பது அறியப்படும்.

அருமறை - அரிய இரகசியம் - இங்கே மந்திர ஆலோசனை; அவித்த - அடக்கிய; ஆலம் போல ஒலி



அடங்கியது என்பதால் முன்னர் பறவைகள் ஒலித்தன என்பதும், இராமன் அவித்ததால் ஒலி அடங்கின என்பதும் அறியப்பட்டது. இக்கருத்தால் திருமாலுக்கும் ஆலமரத்துக்கும் தொடர்புண்டு என்பது அறியப்படும்.

"கடம்பும்" என்பது கடம்பில் உறைபவனாக கருதப்படும் முருகனை குறிக்கும். "கடம்பமர் நெடுவேள்" (பெரும்பாணி 15) என்பதனால் அறிக. முருகனாகவும் இருப்பது திருமாலே என்கிறது பரிபாடல் - "நல்யாற்று நடுவும்" என்பது ஆற்றின் நடுவில் அமைந்துள்ள துருத்தி எனப்படும் ஆற்றிடைக்குறை. அது அரங்கம் எனப்படும் திருவரங்கம் ஆகும். காவிரி இரண்டாகப்பிரிந்து கொள்ளிடம் வடதிருக்காவேரி எனவும் - காவிரி எனவும் இருபக்கமும் அமைய இடையே அரங்கத்தம்மான் பள்ளி கொண்ட திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் இடமாகும்.

> கடம்பில் உறைபவனான. முருகனாகவும் இருப்பது திருமாலே என்கிறது பரிபாடல்

*"மண்ணகம் துயர் நீங்க, வானகம் தொழுது ஏத்த*
*கண் அகன் கோணாட்டுக் காவிரிவாய்ப்புளினத்து*
*பம்பு கதிர் விசும்பு இரவி பசும் புரவி வழி விலங்கு*
*செம்பொன் மதில்ஏழ்உடுத்த திருஅரங்கப்பெருங்கோவில்*
*ஆணிப்பொன் - தகடு உரிஞ்சும் அணிக்கதவ நீள்வாயில்*
*மாணிக்க வெயில் பரப்பும் வயிரமணி விமானத்துள்*
*மின் இலங்கு கொடி வலய வியன் வலக்கை கீழ் கொடுத்து*
*தென் இலங்கைத் திசை நோக்கி, திருநயனம் துயில்வோய்!"*

(புளினம் - மணல்திட்டு) அன்று பிள்ளைப்பெருமாள் அய்யங்காராகிய அழகிய மணவாளதாசர் தாம் இயற்றிய திருவரங்கக்கலம்பகத்தின் முதற்பாட்டிலேயே திருவரங்கப்பெருமானின் திவ்ய சேவையை அனுபவிக்க செய்கிறார்.





அடுத்து "கால் வழக்கு அறு நிலைக்குன்றம்" என்பது திருவேங்கடம், திருநீர்மலை, திருவித்துவக்கோடு, திருமாலிருஞ்சோலை மலை முதலிய திவ்ய தேசங்களில் பெருமாள் எழுந்தருளி சேவை சாதிப்பதாய் கொள்வார் உளர். அவை எல்லாம், காற்று போக்கு வரவு செய்து கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற மலைகள் தாமேயன்றி, பிராண வாயுவின் இயக்கமற்று நடக்கும் தன்மை உடைய குன்றம் அன்று; பிராணவாயுவின் இயக்கம் அற்ற மலை என்பது திருக்கயிலாய மலை என்பது ஆகும். அங்கே கயிலாயநாதராக எழுந்தருளியிருப்பவர் சிவபெருமான் ஆவர். அந்த சிவபெருமானாக இருப்பவரும் திருமாலே என்கிறது பரிபாடல். பரிபாடலில் "அவ்வவை மேவிய வேறு வேறு பெயரோய்" என 69ஆம் அடி குறிப்பிடுவதை இங்கே இணைத்து காணின் எப்பெயரால் அழைக்கப்பெறினும், பெயர்தான் வேறே தவிர பொருள் ஒன்றுதான் - அது திருமாலே என்பதுதான் பரிபாடற்கருத்தாகும். (தொடரும்)

> கயிலாயநாதராக எழுந்தருளியிருக்கும் சிவபெருமானாக இருப்பவரும் திருமாலே என்கிறது பரிபாடல்.

**அக்ஷரமணமாலை** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-167)

மானம் கொண்டுறுபவர் மானத்தை யழித்தபி

மானமில்லாதொளிர் அருணாசலா

மனித பிறவியை சரியாக பயன்படுத்துவோர் எவரும் இல்லை. எந்த ஒரு பொருளையும், எதற்காக அது இருக்கிறதோ அதற்காக அதை உபயோகப்படுத்தாமலிருப்பதும் தவறு; அதே சமயத்தில் அப்பொருளை தகுந்த காரணமின்றி பயன்படுத்துவதும் தவறு. உதாரணமாக காவலாளி தனது ஆயுதத்தை திருடன் மேல் செலுத்தாமலிருப்பதும், அப்பாவி மேல் செலுத்துவதும் தவறு. அது போல் உலக விஷயங்களில் மனதை செலுத்துவதும் தவறு; முக்திக்காக முயலாமலிருப்பதும் தவறு.

க்ஷேத்ராடனம், தீர்த்தயாத்திரை, தானதர்மம், சாதனை ஆகியவை புண்யசெயல்கள் எனினும், ஒரு ஜீவன் முக்தரான குருவின் அருள் முன், இது ஒன்றுமே இல்லை. புயல்காற்றிருக்க ஒருவன் விசிறிக்கொள்வது போல்தான், ஜீவன்முக்தரான குருவிருக்க, அவர் அருகிலிருக்காமல், ஒருவன் மேற்கண்ட புண்யசெயல்களில் ஈடுபடுவது.

உடலே நான் என நினைப்பதுதான் முதல் அபிமானம். விடமுடியாதது இது. சீடன் தேக அபிமானத்துடன் ஒரு உத்தம குருவை அண்டுகிறான். அவர் தன் அலௌகீகமான பிரியத்தை காண்பித்து, அந்த சீடனின் ஹிருதயத்தில் இடம் பிடிக்கிறார். குரு காட்டிய பிரியத்தால் சீடன் குருவிடம் பந்தப்பட்டு போகிறான். அவன் அப்படி பந்தப்பட்ட பின், குரு வெளியில் காட்டிய தனது பிரியத்தை மறைத்து, "அபிமானம்" இல்லாதது போல் இருக்கிறார். (வளர்ந்த குழந்தையிடம் தாய் நெருக்கத்தை குறைத்தாலும் அவள் அன்பு குறைவதில்லையே? அப்படியே, உண்மையில் குருவின் பிரியம் குறையவே இல்லை.) அதனால் சீடன் தனது ஹிருதயத்திலேயே, தனது பிரிய குருவின் ஸ்வரூபத்தை தேட ஆரம்பிக்கிறான். உண்மையில் பகவானே கூட குருவின் மூலம்தான் எந்தவொரு



பக்தனையும் எடுத்து கொள்கிறான். பண்டரிபுர பக்தர்களில் முக்கியமானவரான நாமதேவரை ஒரு முறை கோராகும்பர் "பக்குவமடையாதவர்" என்று சொல்லி விடுகிறார். பகவானே நேரில் பேசும் தன்னை, இப்படி கோராகும்பர் சொல்கிறாரே என பகவானிடம் முறையிடுகிறார் நாமதேவர். பகவானோ கோராகும்பர் சொல்வதை ஆமோதித்து, நாமதேவரை ஒரு குருவிடம் அனுப்பி வைக்கிறான். அந்த குரு நாமதேவருக்கு பாண்டுரங்கன் எல்லாவிடங்களிலும் இருப்பதை அனுபவத்தில் உணர்த்துகிறார்.

ஒரு உத்தம குருவின் லக்ஷ்யமும் இதுவே. அப்படி (ஆன்மாவை) இறைவனை குருவருளால் அடையும் சீடன்தான் உடல் பற்றை விட முடியும்.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

**ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்**

| | |
|---|---|
| மார்ச் 11, 26 | ஏகாதசி |
| மார்ச் 12 | மாலை - பகவான் யோகிராம்சுரத்குமார் ஆராதனை மற்றும் நூல் வெளியீடு, திருவண்ணாமலை ஆஸ்ரமம் |
| மார்ச் 18 | சமஸ்கிருத கல்லூரி , சென்னை |
| மார்ச் 21 | திருவல்லிக்கேணி சத்சங்கம் |
| மார்ச் 31 to ஏப்ரல் 3 | பெங்களூர் கல்கரே கிராமம், சுந்தர ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேக இரண்டாம் வருட முடிவு |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.